

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஜனவரி 19, 2017 புரட்சி 16 முழக்கம் 01 விலை: ரூ.3.00


## எம்.ஜி.ஆர். நூற்றாண்டு!

அடித்தட்டு மக்களின் செல்வாக்குப் பெற்ற தலைவராக திகழ்ந்தவர், மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 'மக்கள் திலகம்' என்றும், 'புரட்சித் தலைவர்' என்றும் அழைக்கப்பட்ட அவரது ஆட்சிக் காலத்தில் சாதனைகளும் உண்டு; கொள்கைத் தடுமாற்றங்களும் உண்டு.

பெரியார் நூற்றாண்டு விழா, அவரது ஆட்சிக் காலத்தில்தான் – அரசு விழாவாக தமிழக அரசால் கொண்டாடப்பட்டது. பெரியார் அறிமுகப்படுத்திய தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை அரசு அங்கீகரித்தது. பெரியார் பொன் மொழிகளை நூலாக வெளியிட்டு பரப்பியதோடு, தமிழகம் முழுதும் முக்கிய நகரங்களில் பெரியார் நினைவாக 'பகுத்தறிவுச் சுடர்' நிறுவப் பட்டது. பெரியார் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் கலை நிகழ்வுகள் பல நகரங்களில் நடத்தப்பட்டன. வீதிகளில் இருந்த ஜாதிப் பெயர்கள் நீக்கப்பட்டன.

பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தியதும் எம்.ஜி.ஆர். ஆட்சியின் மகத்தான சாதனை. ஆனால், இடஒதுக்கீடு குறித்த தெளிவான புரிதல் அவருக்கு இல்லாமல் போனதால் பார்ப்பனர்கள் எம்.ஜி.ஆரிடம் தங்களுக்கிருந்த செல்வாக்கைப் பயன் படுத்தி, பிற்படுத்தப்பட்டோரை நிர்ணயிக்க பொருளாதார வரம்பை அமுலாக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். அதையேற்று 9000 ரூபாய் வருமான வரம்பு ஆணையை 1979ம் ஆண்டு அவர் அறிவித்தார். தமிழகமே கொந்தளித்தது. பிறகு, மக்கள் உணர்வுக்கு மதிப்பளித்து, அந்த உத்தரவை நீக்கம் செய்ததோடு, பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டின் அளவையும் 50 சதவீதமாக உயர்த்தினார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எம்.ஜி.ஆர். காட்டிய ஆதரவு வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கக் கூடியதாகும். களத்தில் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெருமளவில் தனது சொந்தப் பொறுப்பில் நிதி உதவி செய்ததோடு, மிகப் பெரும் உதவிகளையும் வழங்கினார். ஈழத் தமிழர் மீது இலங்கை அரசு நடத்திய இராணுவ தாக்குதலைக் கண்டித்து, தான் கருப்புடை தரித்ததோடு தனது அமைச்சரவையிலிருந்த அமைச்சர் களையும் கருப்புச் சட்டைப் போட வைத்தார். அன்றைய மத்திய காங்கிரஸ் ஆட்சி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஒப்பந்தங்களை திணித்து ஏற்குமாறு மிரட்டியபோது, முதல்வர் எம்.ஜி.ஆர். போராடும் விடுதலைப் புலிகளுக்கே ஆதரவாக இருந்தார்.

எம்.ஜி.ஆர். அறிமுகப்படுத்திய சத்துணவுத் திட்டம், கல்வித் துறையில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. பள்ளிக்கூடம் பக்கமே திரும்பாமல், கூலி வேலைக்கு செல்லும் கட்டாயத் திலிருந்த கிராமப்புற ஒடுக்கப்பட்ட சமுதாயத்துக் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வரச் செய்தது இத்திட்டம். உச்சநீதிமன்றம் இதில் தலையிட்டு அனைத்து மாநில அரசுகளும் இத்திட்டத்தைப் பின்பற்ற பரிந்துரைத்தது. இப்படி பல சாதனைகள் நிகழ்ந்தாலும், திராவிடர் இயக்கத்தின் அடிப்படையான பகுத்தறிவு பார்ப்பனிய எதிர்ப்புக் கொள்கைகளை எம்.ஜி.ஆர். ஆட்சி நீர்த்துப் போகச் செய்தது என்பதும் உண்மை.

உலகத் தமிழ் மாநாட்டை தொடங்கி வைக்க காஞ்சி சங்கராச்சாரி அழைக்கப்பட்டார். சங்கராச்சாரி நடத்திய இந்து பண்பாட்டு விழாவில் முதல்வராக எம்.ஜி.ஆர். கலந்து கொண்டார். காஞ்சிபுரத்தில் பெரியார் சிலை வைக்க தி.மு.க. ஆட்சியில் அனுமதி வழங்கப்பட்ட பிறகு, ஆட்சி மாற்றம் நடந்தது. ஆட்சிக்கு வந்த முதல்வர் எம்.ஜி.ஆர். காஞ்சி சங்கர மடத்துக்கு அருகே இந்த இடம் இருப்பதால் அங்கே பெரியார் சிலையை அனுமதிக்க முடியாது என்று கூறினார். "நான் சங்கராச்சாரி யாரோடு கலந்து பேசிய பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தேன்; சங்கராச்சாரி ஒரு துறவிக்கு உரிய அடையாளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்; அந்த மடத்துக்கு அருகே பெரியார் சிலை வைக்க அனுமதிக்க முடியாது" என்றார். பிறகு உயர்நீதிமன்றம் வழியாக அனுமதி பெற்று அதே இடத்தில் பெரியார் சிலை நிறுவப்பட்டது. தனது அமைச்சரவையில் பார்ப்பனர் ஒருவரை (டாக்டர் ஹண்டே) முதன்முதலாக அமைச்சராக்கினார். தன்னை மூகாம்பிகை பக்தராக அடையாளப்படுத்திக் கொண்டார். காஞ்சி மூத்த சங்கராச்சாரி இந்தியா முழுதும் சுற்றுப் பயணம் செய்து, காஞ்சி மடத்துக்கு திரும்பியபோது, தமிழக எல்லையில் தமிழக அரசு சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அறநிலையத் துறை அமைச்சராக இருந்த ஆர்.எம். வீரப்பன், சங்கராச்சாரியை ரிக்ஷாவில் அமர வைத்து அவரே ரிக்ஷாவை இழுத்து வந்தார். 'பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார் பிரச்சினை எல்லாம் முடிந்துவிட்டது' என்று அமைச்சர் வீரப்பன் பேசினார். திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் அவரது ஆட்சி உருவாக்கிய இந்த 'உடைப்பு'தான் பிறகு ஜெயலலிதா ஆட்சியில் மேலும் மோசமாகி 'இந்து புரோகித' கட்சியாகவே தன்னை அ.இ.அ.தி.மு.க. அடையாளப்படுத்திக் கொண்டது.

எம்.ஜி.ஆர். நூற்றாண்டில் இந்த நிறை குறைகளை சரியாக மதிப்பீடு செய்வது மிகவும் அவசியமானதும் தேவையானதுமாகும். எதிர்காலத்திலாவது திராவிட அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைப் பாதையை செப்பனிடுவதற்கு இது பயன்படும்.

# மத்திய ஆட்சியை வழிநடத்தும் ஆர்.எஸ்.எஸ். குழுக்கள்: அதிர்ச்சியூட்டும் தகவல்கள்

*மோடி ஆட்சியின் அனைத்து செயல் பாடுகளையும் கண்காணித்து வழி நடத்து வதற்கு ஆர்.எஸ்.எஸ். தனித்தனியான குழுக்களை அமைத்துள்ளது.*

சிக்சா ஸான்ஸ்கிருதி உதன் நியாஸ் (SSUN) - கல்வி மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கான அறக்கட்டளை - ஆர்.எஸ்.எஸ்.இன் கிளை அமைப்பு. இந்தியாவின் தற்போதைய கல்விக் கொள்கையில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் 2007ஆம் ஆண்டு முன்னாள் ஆர்.எஸ்.எஸ். ஊழியரான தயானந்த் பத்ரா என்பவரால் நிறுவப்பட்டது. பாடத் திட்டங்கள், கல்விக் கொள்கைகள் மற்றும் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி அதனை காவி மயமாக்குவதே இதன் வேலை.

இதன் உறுப்பினர்கள் குழு கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி அன்று மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகரை சந்தித்து புதிய கல்விக் கொள்கையில் இந்து தேசியத்தை புகுத்துவது தொடர்பான கருத்துகளை முன் வைத்தது. இவர்கள் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள வரலாற்று பிழைகளையும் சுட்டிக் காட்டியுள்ளார்களாம். அதனை புதிய பாடத் திட்டம் கொண்டு வரும்பொழுது அரசு கவனிக்கும் என்றும் ஜவடேகர் உறுதி அளித்துள்ளார்.

வென்டி தோனிகர் (Wendy Doniger) எழுதிய 'The Hindus-An Alternative History' என்ற புத்தகம் தடை செய்யப்படுவதற்கும், டெல்லி பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்தில் இருந்து ஏ.கே. ராமானுஜம் எழுதிய "முன்னூறு இராமாயணம்" என்ற கட்டுரையை நீக்கியதற்கும் இந்த அமைப்பின் பிரச்சாரம் முக்கிய காரணம்.

இந்த அமைப்பின் கருத்துக்களை ஆளும் பாரதீய ஜனதா கட்சி செவிமடுத்து கேட்கின்றது. முன்பெல்லாம் நமது கோரிக்கைகள் நிறைவேற நீதிமன்றம் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது அரசு செவி மடுக்கின்றது என்கின்றார் இவ்வமைப்பின் பொதுச் செயலாளர் அதுல் கோத்தாரி. முன்பிருந்த வாஜ்பாய் அரசைவிட இன்றைய அரசு ஆர்.எஸ்.எஸ். உடன் இணைந்து செயல்படுவதில் தடைகளை ஏற்படுத்திக் கொள்வதில்லை. ஆட்சி முறை மற்றும் கலாச்சாரத்தில் நேருவின் வழிமுறையை அகற்றிவிட்டு தனது தடத்தைப் பதிக்கவே மோடி முயன்று கொண்டிருக்கிறார் என்கிறார் ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவர்.

ஆர்.எஸ்.எஸ். தனது திட்டங்களை நிறைவேற்ற மோடி அரசை இயக்கிக் கொண்டிருக்கிறது. கல்வி, பாதுகாப்பு மற்றும் கலாச்சாரம் தொடர்பான விவகாரங்களில் முடிவுகளை எடுப்பதற்கு ஆறு குழுக்களை ஆர்.எஸ்.எஸ். நியமித்துள்ளது. அதன் உறுப்பினர்களாக பா.ஜ.க.வின் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ்.இன் பொதுச் செயலாளரான தத்தத்ரேய ஹோசபலே மற்றும் கிருஷ்ணா கோபால் ஆகியோர் அரசாங்கமும் இந்துத்துவாதிகளும் இணைந்து நடத்தும் பாசறைகளை ஒருங்கிணைக்கின்றனர்.

இந்த ஒருங்கிணைப்பு சந்திப்பில் கூறப்படும் சில கருத்துக்கள் உடனடியாக அமைச்சர் களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. நிபந்தனைகளுக்கு ஒத்துப்போகும் சில கருத்துக்கள் உடனடியாக செயல்படுத்த முடியாது என்றாலும் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. சாத்தியமில்லாத சில கருத்துகள் ஒதுக்கப்படு கின்றன.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் ஆர்.எஸ்.எஸ். சமன்வே பைதக் என்ற பெயரில் ஒருங்கிணைப்பு சந்திப்பை நடத்தியது. நோக்கம் என்னவென்றால், ஆர்.எஸ்.எஸ்.ஆல் கௌரவிக்கப்படும் இந்து தலைவர்களுக்கு முக்கிய பதவிகளைப் பெற்றுத் தருவதே.

கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மும்பையில் இராஜேந்திர சோழனின் உருவப்படத்தை அம்மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் திறந்து வைத்தார். மஹாரானா பிரதாப், கௌத்தியா வைஷ்னவிசம் நிறுவனர் சைதன்ய மஹா பிரபு, ஜனசங்கின் தீனதயாள் உபாத்யாய ஆகியோரின் பிறந்த நாள்களை பண்பாட்டு அமைச்சகம் தற்போது கொண்டாடி வருகிறது.

பாரதிய சிக்சா மண்டல் என்ற ஆர்.எஸ்.எஸ்.ஸின் கிளை அமைப்பு. ஆரம்பப் பள்ளி முதல் உயர்நிலை கல்வி வரை உள்ள பாடத் திட்டங்களில் இந்திய அறிவு பாரம்பரியத்தோடு ஒத்துப் போகும் பல மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்று முன்மொழிந்துள்ளது. எங்களுடைய சில அறிவுரைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்கிறார் இதன் இணை ஒருங்கிணைப்பு செயலாளர் முகுல கனித்கர். "முனைவர் பட்டத்திற்கான வழிகாட்டி பயிற்சி பட்டறைகளை இதுவரை 26 பல்கலைக்கழகங்களில் நடத்தியுள்ளோம். நாக்பூரில் நடந்த மறுமலர்ச்சிக்கான ஆராய்ச்சி என்ற மாநாட்டில் 55 (பல்கலைக்கழக) துணை வேந்தர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இதன் மூலம் இந்திய அறிவு முறைமை முன்னெடுத்து செல்லப்படும்" என்கிறார் கனித்கர்.

நீதிமன்றங்களிலும், சட்டமன்றங்களிலும் மற்றும் தொழிற்துறை சார்ந்த கல்லூரிகளிலும் வட்டார மொழிகளோடு இந்தியையும் திணிப்பதே அடுத்தக்கட்ட பணி என்கிறார் கோத்தாரி. பாரதிய சுரக்ஷா மஞ்ச் என்ற அமைப்பு இதற்கான பிரச்சாரத்தை

(4ஆம் பக்கம்)

## தமிழக அரசுக்கு கழகம் வேண்டுகோள்

## எம்.ஜி.ஆர். நூற்றாண்டு நினைவாக நீண்டகால சிறைவாசிகளை விடுதலை செய்க!

எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை தமிழக அரசு கொண்டாட முடிவெடுத்திருக்கும் நிலையில் ஒரு வேண்டுகோளை திராவிடர் விடுதலைக் கழகம் அ.இ.தி.மு.க. பொதுச் செயலாளர் வி.கே. சசிகலா அவர்களுக்கும், தமிழக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் முன் வைக்க விரும்புகிறது. தமிழ்நாட்டில் நீண்டகால சிறைவாசிகளையும் இராஜீவ் கொலை வழக்கில் சிறையில் வாழும் 7 தமிழர்களையும் மாநில அரசுக்கு உரிய உரிமையைப் பயன்படுத்தி விடுதலை செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இதை செய்தால் அது புதிய ஆட்சிக்கு பெருமை சேர்ப்பதோடு, எம்.ஜி.ஆர். நூற்றாண்டுக்கும் சரியான நினைவுப் பரிசாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

ஏற்கெனவே அண்ணா நூற்றாண்டின்போதும் கலைஞர் சட்டமன்றப் பணியின் 50ஆம் ஆண்டு நிறைவை யொட்டியும் 'சுதந்திரம்' பெற்று 25ஆம் ஆண்டு நிறைவுக்காகவும் தமிழகத்தில் இதேபோல் சிறைவாசிகளின் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான வாதங்கள்: சரியானது தானா?

தென்தமிழகத்தில் அதிக எண்ணிக்கை யில் இருக்கும் ஆதிக்க ஜாதியினரான முக்குலத்தோரின் விளையாட்டுதான் ஜல்லிக் கட்டு, இது ஒட்டுமொத்த தமிழர்களின் விளையாட்டுகள் அல்ல என்று பெரியாரிய வாதிகள் சொன்னபோது, தமிழ்த் தேசிய வாதிகள் அதை மறுத்தார்கள். ஆனால், உண்மை என்னவென்பதை ஜல்லிக்கட்டு நடத்துபவர்களே ஒத்துக் கொண்டுள்ளனர்.

09.01.2017 அன்று நியூஸ் 18 தொலைக் காட்சியில் நடந்த விவாதத்தில் அம்பேத்கரிய லாளர் அன்பு செல்வம் பேசும்போது -

“1996இல் தென் தமிழகத்தில் ஜாதிக் கலவரங்கள் அதிகமாக நடைபெற்றபோது, அதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மோகன் கமிஷன், ‘ஜாதிக் கலவரங்களுக்கான காரணிகளில் ஜல்லிக்கட்டும் ஒன்று’ எனக் கூறியது என்றும், ஜல்லிக்கட்டுக்குப் பின்புலத் தில் ஒரு குறிப்பிட்ட ஜாதியின் அதிகார அரசியல் இருக்கிறது என்றும், இது தொடர்ச்சியாக தலித் மக்களின் மீது வன் கொடுமைகளை கட்டவிழ்த்துக் கொண்டிருக் கிறது என்றும் குற்றம் சாட்டினார்.

அதற்குப் பதிலளித்த ஜல்லிக்கட்டு மீட்புக் குழுவின் உறுப்பினர் இராஜேஷ், 1996இல் ஜாதிக் கலவரம் ஏற்படுவதற்கு ஜல்லிக்கட்டு முக்கிய காரணமாக இருந்தது என்றும், 2004, 2005 ஆம் ஆண்டு வரை இது ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் (ஜாதியினர்) விளையாடும் விளையாட்டாகத்தான் இருந்தது என்றும், 2006க்குப் பின் உச்சநீதிமன்றக் கட்டுப் பாடுகள், தடை வந்தபின்பு இந்த நிலைமை மாறிவிட்டது என்றும், இன்று அனைத்து ஜாதியினரும் விளையாடுகிறார்கள் என்றும் கூறினார்.

இராஜேஷின் பேச்சிலிருந்து தமிழ்த் தேசியவாதிகள் தெரிந்து கொள்ள வேண்டி யது - ‘ஜல்லிக்கட்டு எப்போதும் ஒட்டு மொத்த தமிழர்களின் விளையாட்டாக இருந்தது இல்லை; 2000 ஆண்டுகளாக - அதாவது 2006 வரை - முக்குலத்தோரின் சாதி விளையாட்டாகத்தான் இது இருந்துள்ளது. நீதித் துறையும், காவல் துறையும் இதில் தலையிட ஆரம்பித்த பின்பு தான், அனைத்துச் ஜாதியினரும் உள்ளே வர ஆரம்பிக்கிறார்கள்.’

இது எப்படி என்றால், குடித்துவிட்டு சண்டை போடுபவர்கள், போலீஸ் வந்ததும், கட்டிப் பிடித்துக் கொண்டு, எங்களுக்குள் பிரச்சினை ஒண்ணும் இல்லையே என்பார்களே... அதுபோலத்தான்.

கட்டுப்பாடு, தடை வந்ததும் எல்லா சாதிகளின் ஆதரவைத் தேடும் முக்குலத்தோர், நாளை தடையும், கட்டுப்பாடுகளும் நீங்கிய பின்பு, அதே ஆதிக்க அரசியலைத் தொடர்வார்கள். அதைத்தான் தமிழகத்தின் ஒவ்வொரு ஜாதிப் பிரச்சினையிலும் நாம் பார்த்து வருகிறோம்.

***

ஜல்லிக்கட்டு மூலமாகத்தான் நாட்டு மாடுகள் காப்பாற்றப்படுகின்றன என்பது தமிழ்த் தேசியவாதிகளின் மற்றுமொரு வாதம். இது உண்மை என்றால், ஜல்லிக்கட்டு நடைபெறாத 27 மாவட்டங்களில் நாட்டு மாடுகளே இல்லாமல் இருந்திருக்க வேண்டும் அல்லவா?

1970களின் தொடக்கத்தில் தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் நாட்டு மாடுகள் இருந்தன. விவசாயிகள் தங்களது விவசாயத் தேவைகளுக்காக நாட்டு மாடுகளை வளர்த்தார்கள். பசு மாடு என்றால் பால் - உணவு, சாணம் - உரம் என்ற பயன்பாடு இருந்தது. காளை மாடு என்றால் உழவு, மாட்டு வண்டி என்ற பயன்பாடு இருந்தது. வெண்மைப் புரட்சி வந்தபோது, விவசாயிகள் ஜெர்சி பசுக்களுக்கு மாறினார்கள். டிராக்டர்கள் வந்தபின்பு காளை மாடுகளை விற்றுவிட்டார்கள்.

பாலுக்கு விலை இல்லை, தீவனத்துக்கு அதிகம் செலவாகிறது எனும் நிலை வருகிறது என்று வைத்துக்கொள்வோம். இன்று ஜெர்சி மாடுகளை வைத்திருப்பவர்கள் எல்லாம் அவற்றை விற்றுவிடுவார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை. ஜல்லிக்கட்டு மூலமாக நாட்டு மாடுகளைக் காக்கப்படுகிறது என்பதே, ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்ட பின்பு உருவாக்கப்பட்ட கோஷம்தான். இதை யாராவது ஆதாரத் துடன் மறுக்க முடியுமா?

ஜல்லிக்கட்டு மாடுகளையும், விவசாயத்தை யும் தொடர்புபடுத்திப் பேசுபவர்களிடம் மறுபடியும் சொல்கிறோம், காளை மாடு களை விவசாயிகள் எப்போதோ கைகழுவி விட்டார்கள்.

வேண்டுமானால், இப்படி பரிசோதிக்க லாம். பத்து ஜோடி காளை மாடுகளை வெவ்வேறு கிராமத்து எளிய விவசாயி களுக்குப் பரிசளியுங்கள். ஓர் ஆண்டு கழித்துப் போய் பாருங்கள். அவர்கள் அவற்றை விற்றிருப்பார்கள். காரணம், காளை மாடுகள் அவர்களுக்கு இன்னொரு சுமை. தீவனம், பராமரிப்புக்கு ஆகும் செலவில் நூற்றில் ஒரு பங்குகூட திரும்ப வருவது கிடையாது.

இன்றைக்கு ஜல்லிக்கட்டு காளை மாடுகளை வளர்ப்பவர்கள் யாரென்று பார்த்தால், பொருளாதாரத் தன்னிறைவு அடைந்தவர்களாகவோ, அல்லது காலம் காலமாக ஜல்லிக்கட்டு மாடுகளை வளர்ப் பவர்களாகவோ தான் இருக்கிறார்கள். எத்தனை எளிய விவசாயிகள், எத்தனை தலித் மக்கள் ஜல்லிக்கட்டு மாடுகளை வளர்க் கிறார்கள் என்று கணக்கெடுத்தால் உங்கள் வாதத்தின் பலவீனம் புரியும்.

***

ஜல்லிக்கட்டு மூலமாகத்தான் பொலி காளைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்று சிலர் கூறுகிறார்கள். அப்படி என்றால், ஜல்லிக் கட்டு நடைபெறாத 27 மாவட்டங்களில் என்ன செய்திருப்பார்கள்? சினை பிடிப்பதற்காக திருச்சி, மதுரை, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களுக்கு பசுக்களை ஓட்டி வந்தார்களா? அப்படி எல்லாம் ஏதும் நடக்க வில்லை. அந்தந்த ஊர்களில் இருந்த காளை மாடுகளைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

உழவு, பாரம் இழுத்தல் ஆகியவற்றுக்கு டிராக்டர்கள் வந்தபின்பு, காளைமாடுகளை விற்றுவிட்டு, சினை ஊசி போடத் தொடங்கி விட்டார்கள். பயனில்லாத காளை மாடுகளை வளர்ப்பதைவிட, சினை ஊசி போடுவதற்கு ஆகும் செலவு மிக மிகக் குறைவு என்பதை அறிந்த யதார்த்தவாதிகள்தான் நமது விவசாயிகள்.

ஜல்லிக்கட்டில் பிடிபடாத மாடுகள்தான் வீரியமான கன்றுகளைப் பெற பயன்படுத்தப் படும் என்றும் சொல்கின்றனர்...

அறிவியல்ரீதியாக இதில் எந்த உண்மையும் இல்லை. ஆரோக்கியமான ஆணும், ஆரோக்கியமான பெண்ணும் இணைவதன் மூலம் ஆரோக்கியமான குழந்தை பிறக்கும் என்பதுதான் மருத்துவ அறிவியல்.

பலமான ஆண்தான் நல்ல குழந்தையைத் தரமுடியும் என்றால், அர்னால்ட், முகமது அலி, மைக் டைசன், போன்ற வீரர்கள் போன்றவர்கள்தான் உலகின் எல்லா குழந்தை களுக்கும் தந்தையாக இருந்திருக்க வேண்டும்.

வீரியமான கன்றுகளுக்காக கவலைப்படு பவர்கள், ஜல்லிக்கட்டு மாடுகளிடம் படக் கூடாத இடத்தில் உதை வாங்கி, ஆண்மையை இழக்கும் மாடுபிடி வீரர்களைப் பற்றி ஏன் கவலைப்படுவதில்லை?

***

இன்று ஜல்லிக்கட்டுக்காகப் போராடும் அரசியல் கட்சிகள், இயக்கங்கள் எல்லாம் தங்கள் போராட்டங்களில் தவறாமல் சொல்லும் வாதம் ‘நாட்டு மாடுகளைக் காப்பாற்ற வேண்டும்’.

பெரியாரியவாதிகள் தாங்கள் நம்பும் செய்திகளை வெறும் பிரச்சாரத்துடன் நிறுத்தி விடுவதில்லை. சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லாது என்று இருந்த காலத்திலேயே ஊர் ஊராக சுய மரியாதைத் திருமணங்கள் நடத்தினார்கள்; தங்களது மாநாடுகளில் தாலியைக் கழற்றி வீசினார்கள்; எந்தக் கூட்டம், விழா நடந் தாலும் மாட்டுக்கறி உணவு பரிமாறினார்கள்.

நாட்டு மாடுகளைக் காக்கப் போராடும் அரசியல் கட்சிகள், இயக்கங்களே... ஊருக்கு ஒரு நாட்டு மாட்டை வாங்கி, தங்களது அலுவலக வாசலில் கட்டி, வளர்க்கலாம். இதற்கு எந்தத் தடையும் இல்லை. நாட்டு மாடுகளைக் காக்க நீங்கள் நடத்தும் போராட்டத்திற்கு ஆகும் செலவில் பாதியை இதற்கு செலவழித்தால் போதும்..! ஆளாளுக்கு வளர்க்கத் தொடங்கினாலே நாட்டு மாடுகளைக் காப்பாற்றி விடலாம். செய்யலாமே...!

***

ஜல்லிக்கட்டை ஒழிக்க பார்ப்பனர்களும் துடிக்கிறார்கள், பெரியாரியவாதிகளும் துடிக்கிறார்கள் என்று பார்ப்பனர்களோடு, பெரியாரியவாதிகளைக் கோர்த்துவிடப் பார்க்கிறார்கள்.

ஜல்லிக்கட்டை தேசியக் கட்சிகளான பாஜகவும், காங்கிரசும் ஆதரிக்கிறது; தமிழ்த் தேசிய இயக்கங்களும் ஆதரிக்கின்றன என்று பெரியாரியவாதிகள் குற்றம் சாட்ட முடியும் அல்லவா?

பசுமாட்டை வளர்க்க வேண்டும் என்கிறார்கள் இந்துத்துவாவினர்.

நாட்டுக் காளைகளை வளர்க்க வேண்டும் என்கிறார்கள் தமிழ்த் தேசியவாதிகள்.

‘ரெண்டையும் வளர்த்துக் கொண்டு வாங்க... நாங்க அடிச்சு சாப்பிடணும்’ என்கிறார்கள் பெரியாரியவாதிகள்.

**நன்றி: கீற்று நந்தன்**

## மயிலை கழகத் தோழர் மனோகரன் தந்தை மணி முடிவெய்தினார் : பெண்களே சடலத்தைச் சுமந்து சென்றனர்




மயிலாப்பூர் பகுதி கழக அமைப்பாளர் மனோகர் தந்தை மணி (60) உடல்நலக் குறைவால் ஜன.2ஆம் தேதி முடிவெய்தினார். இறுதி நிகழ்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத் தோழர்கள் பங்கேற்றனர். சடலத்தைப் பெண்களே சுமந்து சென்றனர். எவ்வித சடங்குகளுமின்றி உடல் எரியூட்டப்பட்டது.

# தமிழர்களுக்கான விழா பொங்கல் மட்டுமே

## பெரியார்

***17.1.1968 அன்று கரூரில் பொங்கல் விழா சிறப்புக் கூட்டத்தில் பெரியார் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதி.***

இந்த பொங்கல் விழா என்பது அறுப்புப் பண்டிகைன்னும் சொல்லுவார்கள். அதேபோல நாமும் அறுத்துப் பண்டங்களைக் குடும்பத்துடன் உபயோகப்படுத்துகிற நாள். மற்றும் நம்மாலான வசதிகளை விவசாயத்துக்காக நமக்கு உதவியாய் இருந்து தொண்டாற்றின ஆளுகளுக்கு - அவர்களுக்கு நாம ஏதாவது திருப்தி பண்ணுகிறதுக்கு - சாப்பாடு போடுகிறதோ, அவர்களுக்கு துணிமணி எடுத்துக் கொடுக்கிறதோ அல்லது ஏதாவது காசு கொடுத்து அவர்களைச் சந்தோஷப்படுத்துகிறதோ - இதெல்லாம், நாம் விவசாயத்தைத் தேர்ந்தெடுத்தோம்.

நேற்று (16.1.968இல்) இந்த நேரத்துக்கு, நான் சேலத்திலே பெரிய மிராஸ்தார் இரத்தினசாமி பிள்ளை என்கிறவர், அவர் தோட்டத்திலே இந்த பண்டிகை வைச்சார். என்னைத்தான் தலைமையாய் அவர் விரும்பினார், போயிருந்தேன். பொங்கல் தடபுடலாக ஒரு அய்ம்பது, அறுபது மாடுகளை வைச்சி நம்ம எதிரிலேயே நடத்தினாரு. இம்மாதிரி இருநூறு பேருக்குச் சீலை வேட்டி தந்தார். ஒரு புலவர் அம்மையார் காமாட்சி அம்மையாருன்னு அந்த அம்மாளைக் கொண்டு நம்முடைய தலைமையிலேயே மக்களுக்கு எல்லாம் எடுத்துக் கொடுக்கச் சொன்னார். கொடுத்தாங்க. இரண்டு மணி நேரம் நடந்தது அந்தப் பண்டிகை. அப்புறம் பத்து, பதினைந்து நாளைக்கு முன்னே 1ஆம் தேதி (1.1.1968ஆம் நாள்) திருநெல்வேலி ஜில்லாவிலே வள்ளியூர் என்கிற ஊரிலே ஒரு விவசாயி அவர் பண்டிகை நடத்தினார். என்னைக் கொண்டே எல்லாருக்கும் எடுத்துக் கொடுக்கச் சொன்னார்.

இது மதத்தைப் பொருத்தது அல்ல. மனிதனுடைய இயற்கையான தன்மையைப் பொருத்ததுதான் இந்தப் பண்டிகை. வேறு யாரும் இதற்கு வேறு கருத்தை ஒண்ணும் சொல்ல முடியாது. ஏனென்றால், இதைத் தான் நாம செய்கிறோம். இதிலே ஒண்ணும் மூட நம்பிக்கையான காரியங்கள் பண்றதில்லே. இதற்கு அவனுடைய பாப்பானுடைய ஆதாரத்தின் படி என்ன கருத்துக் கொடுத்திருக்கிறான் என்றால் இதை மூணு நாளாக ஆக்கினான். ஒரு நாளைக்கு பொங்கல், ஒரு நாள் மாட்டுப் பொங்கல், இன்னொரு நாளைக்குக் கரி நாள் என்று. இதுக்கெல்லாம் அவன் என்ன கதை எழுதி வைத்திருக் கிறான் என்றால் - இந்தப் பண்டிகைகளிலே புராணங் களையும் கடவுள்களையும் மற்றும் முட்டாள்தனங் களையும் ரொம்ப கொண்டுவந்து நிறைய புகுத்தி யிருக்கிறான். இந்தப் பண்டிகை ஆரம்பிச்சது இந்திரனுடைய உற்சவம் - இந்திர விழான்னு - அதிலே எழுதியிருக்கிறான். அது இந்த சிலப்பதிகாரத்திலே கூட இருக்கும் - இந்திர விழான்னு. அதாவது மக்கள் எல்லாம் இந்திரனைக் கும்பிடறதுக்காக, அவனைப் பெருமைப்படுத்துகிறதுக்காக இந்த விழாவை ஆரம்பிச்சாங்களாம்.

இந்திரனுக்கு இந்தப் பண்டிகை நடத்துறதைப் பார்த்து கடவுளுக்குப் பொறாமை வந்துட்டுதாம். நம்மை விட்டுட்டு அவனுக்குப் பண்றாங்களேன்னு. எந்தக் கடவுளுக்கு? கிருஷ்ணனுக்கு. கிருஷ்ணங் கிறவனைக் கடவுள்னு அல்லவா சொல்றாங்க. அவன் இருந்தானோ - இல்லியோ? - கிருஷ்ணன் கடவுள்ன்னு. அவனுக்குப் பெருமை வந்திடுச்சாம். என்னடா இந்த ஜனங்கள் நமக்கு பொங்கல் வைக்காமல் இந்திரனுக்குப் போயி வைக்கிறாங் களேன்னு. இந்திரன் தன்னை என்னா நினைச்சிகிட்டு இருக்கிறான்னா? தான் கிருஷ்ணனுக்கும், இராமனுக்கும் கடவுள்ன்னு நினைச்சிகிட்டு இருக்கிறான். மற்றும் சிவனுக்கும், பிரம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் கடவுள்னு நினைச்சிகிட்டு இருக்கிறான். ஏன்னா? இந்திரனுடைய கணக்குப்படி இவர்கள் எல்லாம் தேவர்கள் தானே தவிர கடவுள்கள் அல்ல. யாரு? சிவன்-விஷ்ணு-பிரம்மா மற்றும் பல கடவுள்களாக இன்னைக்கு நாம கும்பிடுகிறோமே இவனுங்க எல்லாம் தேவர்கள். எதிலே தேவர்கள்ன்னு வர்ராங்கன்னா? வேதத்திலே. வேதத்திலே இந்திரன் தான் தலைவன். எல்லா தேவர்களுக்கும் அவன்தான் அரசன். அவனுக்குப் பேரு தேவேந்திரன்னு பேரு. தேவராஜன்னும் சொல்லுவாங்க. அந்தத் தேவேந்திரன்தான் பெரியவங்கிற முறையிலே அவனுக்கு எல்லாம் வைச்சிகிட்டான். இதற்குக் கிருஷ்ணன் அவன்தான் கடவுள்ன்னு நினைச்சிகிட்டு நாம இருக்கிறபோது அவனுக்கு இதுவெல்லாம் பண்றது என்ன நியாயம் என்பதாகப் பெருமைப்பட்டு மக்களை எல்லாம் கூப்பிட்டு நீங்கள் இந்திரனுக்குப் பொங்கல் வைக்காதீங்க. இந்திர விழா கொண்டாடாதீங்கன்னு சொன்னானாம். ஜனங்கள் இந்திரனைக் கொண்டாடலே.

உடனே இந்திரனுக்குக் கோபம் வந்திட்டுதாம். நமக்கு நடக்கிற பண்டிகையை இவன் சொல்லி நிறுத்திப் போட்டான்னு, இவன் பேச்சை இந்த முட்டாள் ஜனங்கள் ஏத்துகிட்டு பண்டிகை நடத்தாது விட்டுட்டாங்க. ஆனதினாலே அவர்களை நாம சும்மா விடறாதான்னுச் சொல்லி அவன் பெரிய மழையை ஆரம்பிச்சிட்டானாம். மழை பெய்யுது. அந்த மழை வந்த வேகம் நாடெல்லாம் வெள்ளத்திலே அடிச்சிகிட்டு போற அளவிற்கு அவன் மழையை உண்டாக்கிட்டானாம். இதைப் பார்த்த உடனே ஜனங்கள் கிருஷ்ணன்கிட்டே போயி என்னப்பா நீ சொன்னபடி கேட்டேன். அவன் இந்த மாதிரி ஆரம்பிச்சிட்டானே - இப்ப மழை வந்தன்னா எங்கள் கெதி எல்லாம் என்னாகும்? இருண்டு இருக்குது. இடி இடிக்குது. அதாகுது இதாகுதுன்னு போயி கிருஷ்ணன்கிட்டே அழுதாங்களாம். அவன் சொன்னானாம், "நீங்கள் அதுக்காகப் பயப்படாதீங்க. நான் உங்களை எல்லாம் காப்பாற்றுகிறேன்னு" பெரிய மலையை விரலிலே தூக்கி கொடையாட்டம் பிடிச்சிகிட்டானாம் (சிரிப்பு). வந்து எல்லோரும் அதுக்குள்ளே பூந்துக்கிட்டாங்கன்னு. இந்த மாடுகள் - மக்கள் மற்ற ஜீவப் பிராணிகள் அது சம்பந்தப்பட்ட ஜீவப் பிராணிகள் அவைகள் எல்லாம் வந்து அந்த மலைக்குள்ளே இருந்து, மழையினாலே தங்களுக்குக் கேடு இல்லாமல் தப்பிச்சிகிட்டாங்க. இதை இந்திரன் கேட்டு, ஆத்திரப்பட்டு அவன் அங்கே இருந்து, கிருஷ்ணன்கிட்டே வந்து நீ ஏன் இந்த மாதிரி பண்ணினேன்னு கேட்டானாம் இந்திரன். கிருஷ்ணன் சொன்னானாம் என்னத்துக்கு உனக்கு இதுவெல்லாம். இது மாதிரி செய்யுறதுன்னு என்ன கட்டாயம்? நீ உன்னால் ஆனதைப் பாரு - நான் என்னாலானதைப் பார்க்கிறேன்னு கிருஷ்ணன் சொன்னானாம். அப்புறம் இந்திரன் பார்த்து, ஓ இவன்கிட்டே நம்ம கை செல்லாது அப்படின்னு நினைச்சி மன்னிப்புக் கேட்டானாம். மன்னிப்பு கேட்டதுக்கு அப்புறம் உன் பண்டிகை உனக்கும் நடக்கட்டும்; என் பண்டிகை எனக்கும் நடக்கட்டும்னு இரண்டு பேரும் பண்டிகை நடக்கிறதுக்கு அனுமதிச்சாங்களாம். அது தான் **போகிப் பண்டிகை** என்கிறது.

போகி - என்றாலே இந்திரன்னு ஒரு அர்த்தம் உண்டு. அந்த வார்த்தைக்கு - சமஸ்கிருத அகராதிப்படி 'போகி'ன்னா 'இந்திரன்'னு பேரு. இன்னொரு தத்துவார்த்தம் சொல்லுகிறவன், போகின்னா - போக போக்கியங்களை அனுபவிக்கிறது. ஆனதினாலே அதுக்கு போகின்னு பேரு வைச்சிதுன்னு அப்படியும் சொல்றாங்க. ஆகவே, எந்தக் கதையிலே சொன்னாலும் அது ஒரு முட்டாள்தனமாக கருத்தே தவிர வேறு இல்லை.

மற்றும் இந்த - **மாட்டுப் பொங்கலுக்கு** ஒரு கதை. இதெல்லாம் அவுங்க ஆதாரப்படி நான் சொல்றேன். மாட்டுப் பொங்கலுக்கு என்ன சொல்லி இருக்குதுன்னா? வருஷத்துக்கு ஒரு தடவை இந்த சங்கராந்தி **மூதேவி**யாக வருகிறாளாம். அந்த மூதேவியாக வருகிற சங்கராந்தி இந்த மாடு கன்றுகளை எல்லாம் அழிக்க வேணும்னு சொல்லி **புலி** உருவம் எடுத்து மாடுகளை எல்லாம் பிடிக்கப் போவுதாம். அப்போது ஜனங்கள் கூட்டமாய்ச் சேர்ந்து புலியை விரட்டுகிறது. அது பிடிக்க வருகிறது. இவுக எல்லாம் புலியை விரட்டுறாங்க. அதுதான் அந்த மாட்டுச் சங்கராந்தீங்கிறதுக்கு விளக்கம் போட்டு இருக்கிறான்.


**கரி நாள்**-ன்னு என்னமோ வைச்சி அதிலும் மடத்தனமாய் முன்னே என்ன சொன்னோம் - பின்னாலே என்ன சொன்னோம்னு அவன் கவனிச்சி எழுதினவன் அல்ல. பார்ப்பான் ஆயிரம் கதையை எழுதி வைச்சாலும் தண்ணிலேகூட அறிவைக் கொண்டு எழுதியிருக்க மாட்டான். அப்புறம்தான் நமக்குக்கூட தெரிஞ்சிது. இந்த பொங்கல் வைக்கிறபோது "பொங்கலோ - பொங்கல்", "புலியோ புலி"ன்னு சேவணி தட்டுவாங்க. இல்லாட்டா தட்டத்தைத் தட்டுவாங்க; கரும்புத் தடியிலே - எனக்கு ஞாபகம் இருக்குது. எங்கள் வீட்டிலே எல்லாம் எல்லாப் பொங்கலும் நடக்கும். மாட்டை எல்லாம் குளத்துக்குள்ளே விடுவாங்க. சாணியினாலே குளமாட்டம் கட்டி, அதிலே புல்லு - பூவு எல்லாம் போட்டு அதை மிதிக்கச் சொல்றபோது மாடு பாட்டுக்கு அதை மிதிச்சிகிட்டு வரும். ஒருத்தன் அதுக்கெல்லாம் பூசை பண்ணிகிட்டு வருவான். இதைக் குடியானவங்க சில பண்ணை ஆளுங்க தட்டத்தை எடுத்துக்கிட்டு கருமபினாலே தட்டுவாங்க. இங்கேயும் இருக்குதோ என்னமோ அந்த வழக்கம். அங்கே அந்த மாதிரி செய்வாங்க எங்க ஊரிலே, அப்போது சொல்றது, "பொங்கலோ - பொங்கல்!", "புலியோ புலி" - "பொங்கலோ - பொங்கல்!", "புலியோ புலின்னு" - அப்படி சொன்னதினாலே அந்த புலி பயந்துகிட்டு ஓடி மாட்டை பாதுகாக்கிறதாம். இதுக்குத்தான் **'மாட்டுப் பொங்கல்'**ன்னு பேரு வந்ததுன்னு எழுதியிருக்கிறான். இந்த மாதிரியான முட்டாள்தனமான கருத்துக்களில்தான் பண்டிகை பூராவையும் அமைச்சிகிட்டானுங்க.

நமக்கு எத்தனை பண்டிகை இருக்குதோ, அத்தனை பண்டிகையும் இந்த மாதிரியான முட்டாள்தனமான கடவுள் கதைகள் தான் மூடநம்பிக்கைதான். உள்ள பண்டிகைகளிலே ரொம்ப கவலையோட பார்த்தால் இந்த பொங்கல் பண்டிகைதான் - **பகுத்தறிவுப்படி** ஒப்புக் கொள்ளக் கூடியதாகவும், இயற்கையாய் நடக்கக் கூடியதாகவும் இருக்கிறதாகச் சொல்லப்படுகிற பண்டிகை.

# தி.மு.க. நடத்திய நீதிக்கட்சி நூற்றாண்டு நிறைவு விழா: கழகத் தலைவர் பங்கேற்பு



தென்சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் நீதிக்கட்சி நூற்றாண்டு நிறைவு விழா கருத்தரங்கம் **03.01.2017** செவ்வாய்க்கிழமை மாலை **5** மணிக்கு சென்னை நீலாங்கரை, சுகன்யா திருமண மண்டபத்தில் மேனாள் மேயரும் மாவட்ட செயலாளருமான மா. சுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "சமஸ்கிருத திணிப்பு" எனும் தலைப்பில் கருத்துரையாற்றினார். இக்கருத்தரங்கில் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேரா. சுபவீரபாண்டியன் 'நீட் தேர்வு' எனும் தலைப்பிலும், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் 'பண்பாட்டு படையெடுப்பு' எனும் தலைப்பிலும் உரையாற்றினார்கள்.



DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# 2016இல் சமூகநீதிக்கு எதிரான கல்விக் கொள்கைகள்

*2016ஆம் ஆண்டில் சமூக நீதிக்குக் குழிப் பறித்த மோடியின் கல்விக் கொள்கைகள் குறித்த ஒரு தொகுப்பு.*

- தகவல் தொழில்நுட்பக் கல்வியை முன்னிறுத்திப் புதிய கல்விக் கொள்கையை 1986-ல் ராஜிவ் காந்தி அரசு அறிவித்தது. இன்றுவரை இந்தியப் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் அடித்தளம் அதில் போடப்பட்டது. அதன் பிறகு 30 ஆண்டுகள் கழித்து விரைவில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக 43 பக்கங்களைக் கொண்ட 'புதிய கல்விக் கொள்கை 2016' முன்வரைவு வெளியிடப் பட்டது.
- ஒன்பதாம் வகுப்போடு தொழில் துறையில் இணையலாம் என்னும் யோசனை, குலக் கல்வியை மீட்டுரு வாக்கம் செய்யும் முயற்சியாகும். இந்தியக் கலாசாரக் கூறுகளைத் தக்கவைப்பதாகச் சொல்லிச் சமஸ் கிருதத்தைக் கட்டாயப் பாட மாக்கும் திட்டமும் இதில் அடங்கியுள்ளது.
- நாடு முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் 10 லட்சம் வரையிலான காலி யிடங்கள் நிரப்பப்படாமலே இருப்பது 2016இல் தெரியவந்தது. அதிலும் 1 இலட்சத்துக்கும் அதிகமான பள்ளிகள் ஓராசிரியர் பள்ளி களாக இயங்கிவருவதால் கிட்டத்தட்ட 5 இலட்சம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் நியமிக்கப்படாத நிலை நீடித்து வருகிறது. இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான டெல்லி பல்கலைக்கழகத்தில் மட்டும் 900 பணியிடங்கள் காலியாக உள்ளன. அந்த இடங் களில் தற்காலிகமான நியமனத்தில் நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் வேலை பார்த்துவருகிறார்கள். இதற்கு முக்கியக் காரணம் கடந்த 30 ஆண்டுகளாகக் கல்விக் கொள்கை திருத்தியமைக்கப்படாததுதான் என மத்திய அரசு சொன்னது.
- ஆனால், சமீபகாலமாக நூற்றுக் கணக்கான இணைப்புக் கல்லூரிகள் (Affliated) முளைத்துவிட்டன. ஒரு பல்கலைக் கழகத்தின் கீழ் எத்தனை இணைப்புக் கல்லூரிகள் செயல் படலாம் என்பதற்கான வரையறை தீர்மானிக்கப்பட்டால் மட்டுமே முதல் கட்டமாக நிரந்தரப் பணி யிடங்களை நிரப்ப முடியும். இதற்குரிய நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும். அதே நேரம், ஆசிரியர்களை நியமித்தால் மட்டும் போதாது; சரியான உள்கட்டமைப்பு வசதிககளைப் பூர்த்தி செய்தால்தான் கல்வியின் தரத்தை உயர்த்த முடியும்!
- ஆசிரியர்களின் திறன்; வளாக நேர்முகத் தேர்வு மூலமாக வேலை வாய்ப்பு தரும் விகிதம் உள்ளிட்ட அம்சங்களை அடிப்படையாக வைத்து ஆசியாவின் மிகச் சிறந்த 200 கல்வி நிறுவனங்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் சென்னை ஐ.ஐ.டி. உட்பட 6 ஐ.ஐ.டி. நிறுவனங்கள் இடம் பிடித்தன. ஆனால் உலகத் தர வரிசைப் பட்டியலில் இந்தியாவில் ஒரு பல்கலையும் இடம் பெற வில்லை. ஜம்மு, பாலக்காடு, திருப்பதி, தார்வாட், பிலாய், கோவா ஆகிய 6 இடங்களில் புதிய ஐ.ஐ.டி. கல்வி நிறுவனங்கள் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. ஆனால், 2015-16 கல்வி ஆண்டில் மட்டும் 656 மாணவர்கள் நாடு முழுவதும் உள்ள ஐ.ஐ.டி.களிலிருந்து பாதி யிலேயே படிப்பைக் கைவிட்ட அவலமும் நடந்தது. அய்.அய்.டி. அறிவியல் படிப்புக்கு 'சமஸ் கிருதம்' அவசியம் என்று கூறி, அய்.அய்.டி.களில் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாக்கியது மோடி ஆட்சி.
- பிளஸ் டூவில் 500-க்கு 444 எடுத்து பீஹாரின் முதல் மாணவியாக வந்தவர் ரூபா ராய் . "அரசியல், அறிவியல் பாடம் என்பது சமையல் கலை சம்பந்தப்பட்டது" என்று முதலிடத்தில் வந்த மாணவி சொன்னபோது அவர் மட்டுமல்ல; ஒட்டுமொத்தத் தேர்வு முறையும் கேள்விக்கு உள்ளானது. அவரைப் போலவே பீஹாரில் 14 மாணவர்கள் அடிப்படைத் தகுதி இன்றி மாநிலத்தின் முதலிடம் பிடித்திருப்பதாகச் சந்தேகம் எழுந்தது.

  முதலிடம் பிடித்த ரூபா ராய், அறிவியல் பாடப் பிரிவில் மூன்றாம் இடம் பிடித்த ஒரு மாணவர், எப்படி முதலிடத்துக்கு வந்தார்? மாநிலத் தேர்வு வாரியத் தலைவர் லால்கேஷ்வர் பிரசாத், அவரின் மனைவியும் முன்னாள் எம்.எல்.ஏ.வுமான உஷா சின்ஹா, விஷூன் ராய் கல்லூரி முதல்வர் பச்சா ராய் உள்ளிட்டோர் முறைகேட்டில் ஈடுபட்டது விசாரணையில் தெரியவந்தது. இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பெற்றோர், தேர்வு நடைபெறும் அறையின் வெளிப்புறச் சுவரில் ஏறி ஜன்னல் வழியாகத் தங்களுடைய பிள்ளைகளுக்குப் பதில் சொல்லித் தருவதில் தொடங்கி, பீஹாரில் தேர்வு முறையில் ஏகப்பட்ட மோசடிகள் நடந்தேறுவது இதன் மூலம் அம்பலமானது.
- இந்தியா முழுவதும் உள்ள அரசு, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் படிக்க நீட் தேர்வு கட்டாயம் என மத்திய அரசு அறிவித்தது. சி.பி.எஸ்.இ. அல்லாத தனித்த பாடத் திட்டம் கொண்ட மாநிலங் களான தமிழகம், கர்நாடகா, மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் ஆகியவை இனிமேல் சி.பி.எஸ்.இ. முறைப்படி அமைக்கப்பட்ட நுழைவுத் தேர்வான 'நீட்' எழுத வேண்டும். சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தில் நடத்தப்படும் இந்தத் தேர்வால் பிளஸ் டூ தேர்வில் நல்ல மதிப்பெண்ணைப் பெற்றவர்கள், வேறு ஒரு போட்டித் தேர்வை சந்திக்க வேண்டும்; போட்டித் தேர்வுக்கான பயிற்சிக்கு பல ஆயிரம் செலவிடவேண்டும்.

  கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு உள்ளிட்ட 8 மொழிகளில் எழுத லாம் என அறிவிப்பு வந்துள்ளது. ஆனால், நாடு முழுவதும் ஒரே பாடத்திட்டம் வந்த பிறகே இத்தேர்வை நடத்தலாம் என்கிற கோரிக்கையும் கடுமையாகப் படித்துப் பிளஸ் டூ தேர்வை முடித்த மாணவர்களை மீண்டும் அழுத்தத்துக்கு ஆளாக்கக் கூடாது என்கிற எதிர்ப்புக் குரலும் விடாமல் ஒலித்துக் கொண்டிருக் கின்றன. இப்போது வரும் ஆண்டி லிருந்து பொறியியல் பட்டப் படிப்புக்கு நாடு முழுதும் பொது நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டுவரப் போவதாக மோடி ஆட்சி அறிவித்துள்ளது. கல்வி வியாபாரம் நடத்தும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் நுழைவுத் தேர்வு நடத்துவது குறித்து நமக்குக் கவலை ஏதும் இல்லை. அரசு கல்லூரிகளில் படிக்க வரும் கிராமப்புற ஒடுக்கப்பட்ட சமுதாய மாணவர்கள் நல்ல மதிப்பெண் பெற்ற பிறகும் 'நீட்' நுழைவுத் தேர்வு என்ற வடிகட்டும் முறை தான் கொடுமையானது.
- ஒடுக்கப்பட்ட சமூகத்தி லிருந்து வந்து கல்வியின் உயர்ந்த நிலையை அடையப் போராடியவர்களில் மறக்க முடியாத இருவர் ரோஹித் வெமுலாவும் கன்யா குமாரும். ரோஹித் வெமுலா நெருக்கடி தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டார். பல இன்னல் களைத் துணிச்சலாக எதிர் கொண்டு மாணவர்களின் அரசியல் முன்மாதிரியாக மாறியிருக்கிறார் கன்யா. "இந்திய ஜனநாயகத்துக்குப் பலம் சேர்த்த மாணவர்கள்" என்ற அடிப்படையில் கன்யா குமாருக்கும் மறைந்த ரோஹித் வெமுலாவுக்கும் ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம் இரோம் ஷர்மிளா 2016 கல்வி உதவித்தொகையைக் கடந்த மார்ச் மாதம் வழங்கியது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் கடந்த ஆண்டில் கல்வித் துறையில் பெரும் முன் னேற்றம் என்று சொல்லத்தக்க அம்சங்கள் குறை வாகவே இருந்தன. ஊழல்கள், அரசியல் தலையீடுகள், கொள்கை சார்ந்த குறுக்கீடுகள் ஆகியவற்றுக்கு மத்தியில் நம்பிக்கை தரும் சில சலனங்களும் இருந்தன என்பதே 2016 கல்விக் களத்தின் யதார்த்தம்.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்துச் செல்லுமாம். தலித்களிலும் சிந்தனைவாதிகளை வளர்த் தெடுக்கிறது ஆர்.எஸ்.எஸ். இதில் பெயர் குறிப்பிடும்படி முக்கியமானவர்கள் மிலிந்த் காம்ப்ளே என்பவர் இவர். தலித் இந்தியர் வர்த்தகப் பிரிவு நிறுவனர். மற்றொருவர் நரேந்திர ஜாதவ் - இவர் மத்திய அமைச்சர்.

பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளிலும் வலதுசாரி சிந்தனைகளை பரவலாக்கு கின்றனர். பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளரான ராம் மாதவ் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் மகனான சௌர்யா டோவலும் இணைந்து 'இந்தியா நிறுவனம்' என்ற ஒன்றை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு, வெளி நாட்டுக் கொள்கை தொடர்பான பிரச்சினை களில் வலதுசாரி சிந்தனைகளை திணிப்பதில் இவர்கள் சூத்திரதாரிகளாக உருவெடுக் கின்றனர்.

"பல்கலைக்கழக மாணவர்கள் வட்டத்தில் வலதுசாரி சிந்தனைவாதிகளை உருவாக்கு வதற்கு, ஒருங்கிணைந்த தேசிய பாதுகாப்பு குழுமமும், பாரத் நித்தி என்ற அமைப்பும் ஈடுபடுகிறது. சங்கல்ப் என்ற நிறுவனத்தின் வழியாக 1986லிருந்து இன்று வரை ஆயிரம் மாணவர்களை அரசு ஆட்சிப் பணிகளுக்காக பயிற்சி அளித்து அனுப்பியுள்ளோம்" என்கிறார் கணித்கர்.

பண்பாட்டு துறைகளிலும் ஆலோசனை குழுக்களிலும் இன்று வலதுசாரி சிந்தனை கொண்டவர்களையே காண முடிகிறது. ஆர்.எஸ்.எஸ்சின் கருத்துகளோடு ஒத்துப் போகும் பார்வை உடையவர்களே வரலாற்று ஆய்வு மய்யம், இந்திராகாந்தி தேசிய கலை பண்பாட்டு மய்யம், பிரச்சார் பாரதி தேசிய நினைவு காப்பகம், மத்திய திரைப்பட தணிக்கைக் குழு போன்ற அரசு துறைகளில் பணியமர்த்தப்படுகின்றனர். தேசத்தின் பெயரால் இந்தியா காவிமயமாகிக் கொண் டிருக்கிறது. அதற்கான வேலை முழு மூச்சாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

(ஆதாரம் : The Week, December 4, 2016)

---

## கருகி நிற்கிறோம்!

*எங்களின் தானியக் குதிர்கள்..
அடகுக் கடை ரசீதுகளும்,
வங்கி அனுப்பிய "ஜப்தி"
நினைவூட்டல் கடிதங்களாலும்,
மூழ்கிப் போன நகைகளின் விபரக்
காகிதக் குறிப்புகளாலும்
நிரம்பியுள்ளன....
ஏர்முனை தூக்குமேடை ஆகிவிட்டது
பயிர் பூச்சிகளை அழிக்கும் நஞ்சுகள்
எங்கள் உயிர்மூச்சை நிறுத்தும்
நிவாரணிகளாகி விட்டன...
விதைமணிகளை கொன்றாகிவிட்டது,
நுகத்தடிகளையும்,
கால்நடைகளையும் விற்று
தின்றாகிவிட்டது.
இங்கு...
நீர்தருவாரும் இல்லை
கண்ணீர் துடைப்பாரும் இல்லை!
கருகி நிற்கிறோம்
எரியும் பயிர்களுக்கு துணையாக..!
ஏறு தழுவதற்கு போராடும் தமிழரே!
சோறு தரும் எங்களை சாவு தழுவ
விடாதிருக்க இணைவீரா?
போராடவில்லை என்றாலும்
போகிறது...
பொங்கல் வாழ்த்து
சொல்லிவிடாதீர்கள் ....
பச்சையமுள்ள பயிரைக்
காணாதவரை,
உழவனுக்கு பொங்கலின் நிறம்
எல்லாம் கருப்பே..!*

**-பெ.கிருஷ்ணமூர்த்தி**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th January 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN